# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1723/24 - 2011 සැප්තැම්බර් 14 වැනි බදාදා - 2011.09.14

*1723/24 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 14 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் கீழ் நாவலப்பிட்டிய நகர சபையின் உறுப்பினரொருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

நாவலப்பிட்டிய நகர சபையின் உறுப்பினரொருவரின் பதவி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள உறுப்புரைகளின் பிரகாரம் குறிப்பிடப்பட்ட காலப்பகுதியினுள் சத்தியப்பிரமாணம் அல்லது உறுதியுரை செய்து ஒப்பமிடாமை காரணமாக வெற்றிடமாகியுள்ளதாதலாலும் ;

அமதோரு கலப்பத்திகே ஜகத் லக்ஷ்மன் எனும் உறுப்பினர் சேர்ந்திருந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர் முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வெளிப்படுத்தப்படவேண்டிய அக்கட்சியை சேர்ந்தவரும் நாவலப்பிட்டிய நகர சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுடையவருமான ஆளொருவரைப் பெயர் குறிப்பதற்கு மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 65அ (2) என்னும் பிரிவின் கீழ் என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர், அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுள்ள ஆளொருவராக திரு. மீரா சாஹிப் மொஹமட் அஸ்மி என்பவரைப் பெயர் குறித்து நியமித்துள்ளார் ஆதலாலும் ;

இப்போது நாவலப்பிட்டிய நகர சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் யூ. அமரதாச ஆகிய நான், (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு, திரு. மீரா சாஹிப் மொஹமட் அஸ்மி என்பவர் நாவலப்பிட்டிய நகர சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

யூ. அமரதாச,  
தெரிவத்தாட்சி அலுவலர்,  
நாவலப்பிட்டிய நகர சபை.

தேர்தல்கள் அலுவலகம்,  
கண்டி,  
2011, செத்தெம்பர் 01.

09 - 1318

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.